**செய்தி வெளியீடு எண் : 369** **நாள் : 23.02.2023**

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்தியா மற்றும் இலங்கை மாற்றுத்திறனாளிகள் டி–20 நட்பு க் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றுள்ள அணிகளின் வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் நடுவர்கள் சந்தித்தனர்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை இன்று (23.02.2023) சென்னை ஆழ்வார்ப்பேட்டை முகாம் அலுவலகத்தில் இந்தியா மற்றும் இலங்கை மாற்றுத் திறனாளிகள் டி–20 நட்புக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றுள்ள அணிகளின் வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் நடுவர்கள் சந்தித்தனர்.

திவ்யங் கிரிக்கெட் கன்ட்ரோல் போர்டு ஆப் இந்தியா (DIVYANG Cricket Control Board of India) ஏற்பாட்டில் லக்ஷன் & ஹாரூண் நட்புக் கோப்பைக்கான (Lakshan & Haroon Friendship Trophy) டி–20 கிரிக்கெட் (T20 Cricket) போட்டித் தொடர், இந்தியா மற்றும் இலங்கை மாற்றுத் திறனாளிகள் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே சென்னை, போரூரில் உள்ள ராமச்சந்திரா பல்கலைக்கழக மைதானத்தில் 23.02.2023 மற்றும் 24.02.2023 ஆகிய 2 நாட்களாக நடைபெற்று வருகிறது.

3 போட்டிகளை கொண்ட இந்த கிரிக்கெட் தொடரில் இன்று (23.02.2023) நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றது. நாளை (24.02.2023) காலை ஒரு போட்டியும் மாலையில் இறுதிப்போட்டியும் நடைபெறுகிறது.

இந்த போட்டிகளில் பங்கேற்று உள்ள இந்தியா மற்றும் இலங்கையை சேர்ந்த 45 மாற்றுத்திறனாளி கிரிக்கெட் அணிகளின் வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் நடுவர்கள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்தனர்.

இந்த சந்திப்பின் போது இந்திய மாற்றுத்திறனாளிகள் கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் திரு. ஹாரூண் ரசித், செயல் அதிகாரி திரு. கசல், இந்திய அணியின் தலைவர் திரு. சச்சின் சிவா, தலைமை பயிற்சியாளர் திரு. அப்பாஸ் அலி, மேலாளர் அரிச்சந்திரன், ஒருங்கினைப்பாளர் திருமதி மஞ்சுப்ரியா மற்றும் திரு. நவீந்தர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in